திரு. கனகசபாபதி ஹரிச்சந்திரா

அவர்களின்

# நினைவலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு
அலைகள்

வண்ணார்பண்ணை - ஐயனார்கோவி
லடி நொத்தாரிசு உ. ச. பொன்
னுத்துரை அவர்களின் பீட்டனும்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
முன்னாள் ஆசிரியர் ச. பொ.
இராசையா அவர்களின் பேரனும்,
கனகசபாபதி - ஜீவரத்தினம் (இரா
ஜேஸ்வரி) தம்பதியின் புத்திரனு
மாகிய வீர வேங்கை ஹரிச்சந்திரா
(ராதா) நினைவு வெளியீடு

*1987-07-03*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"There is a glorious sun, not the sun you see in the sky, but a sun which is within ourselves, which is much brighter than the sun you see in the sky. When the sun comes out, it only dispels the darkness, but when this sun comes out, it dispels the darkness and ignorance both. It is much brighter than the sun that shines out. It is all within us, just within us"

This Light is very real, very intense, and very bright. It can be seen with the eyes closed at any time, every day. Blind people have taken Knowledge and seen this light.

This light is the pure energy source of our being—what some religions call 'the Light of God". When a person meditates and merges with this light, he becomes, literally, en-lightened. It is the Light that the Lord Buddha says 'arose in me" — and the Light described in the Gayatri Mantra of Hinduism.

— GURU MAHARAJ JI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராதா!

புதுவை இரத்தினதுரை

இந்த மண்ணில்
எழுந்த புயற்காற்றே!
விந்தை ஆயிரம்
விளைந்த யுகப் புருஷா!

தென்றல் நடந்து திரியும் வரையிலும்
குன்றில் முகில்கள் குவியும் வரையிலும்

உந்தன் நாமம் உலவித்திரியும்
ராதா நாமம் வேத சுலோகம்

எங்கெங்கு நாம் பிறந்தோம்
எவ்விடத்தில் நாம் வளர்ந்தோம்
இங்கத் தமிழீழத்,
தாய் மடியில் ஒன்றானோம்.
ஒன்றானோம்,
நாங்கள்
ஒருகொடியிற் பூவானோம்
இன்றோ உனைப் பிரிந்து
ஏங்கித் துடிக்கின்றோம்.
சென்று வருக!
திரும்பி வராவிட்டாலும்,
நன்றியென்ற ஓருணர்வை
நாம் சுமந்து நிற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைக்காக உயிரைக் கொடுத்தவர்

"துன்பத்துக்குள்ளானவரைத் தவிர மற்றெல்லோரும் அதனைத் தாங்கும் சக்தியுடையவர்,. உலக மகாகவி ஷேக்ஸ்பியரின் இக்கூற்று இந்நாட்டின் தமிழ் மக்கள் சிந்தும் இரத்தத்திற்கு மிகப்பொருத்தமானது. தான் செத்து தான் அழும் அவலநிலையை நாம் குறிப்பிடவில்லை. இன்றில்லா விட்டாலும் என்றோ தமிழரின் வீரமும் தியாகமும் உலக வரலாற்றில் இடம்பெறுவது நிச்சயம். யாழ்ப்பாணத்தில் படையினர் நடத்திவரும் படுகொலை குடாநாட்டை முடக்கி விடுமென்று நாம் ஒருபோதும் அஞ்சவில்லை. யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டு பொதுமக்களைத் தனிக்கப் பிடிக்க முயலும் இராணுவமும், அதற்கு உதவி வரும் இலங்கை அரசும் எல்லாம் வல்ல இறைவனுக்கு கணக்குக் கொடுக்கிற காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இன்று யாழ்ப்பாணம் காணும் சோகக்காட்சி போராளிகள் தலைவர்களின் வீரமரணம்; ஒருவர்பின் ஒருவராய் மடிந்த மாவீரர் தமிழரின் புராதன பெருமையையும், யாழ்ப்பாணத்தின் தனித்துவ பலத்தையும் உலகுக்குணர்த்தியிருக்கின்றனர். இந்த உண்மை மக்கள் கவலைக்கு மருந்தாகின்றது. சத்தியத்தைக் காப்பாற்ற அரிச்சந்திரன் தனது மனைவியை காசிமாநகரில் விலைகூறி விற்ற காட்சியைப் போல் தன் மனத்தை வேறெதுவும் கவரவில்லை. என்றார் மகாத்மா காந்தி. பேசும் படத்தில் அந்த ஒன்றையே தான் ரசிக்க முடிந்ததென்றும் சொன்னார்.

இன்று யாழ்ப்பாணத்தையும் – ஏன் உண்மைக்கு முதலிடம் அளிக்கும் மக்கள் அனைவரையும்–உருக்கும் காட்சி இன்னொரு அரிச்சந்திரனின் வீரத்தியாகமே. "வித்தில்லாச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பிரதாயம், மேலுமில்லைக் கீழுமில்லை,, என்பார்கள். அண்மையில் போராளி குகனைப் பற்றிக் குறிப்பிட்ட போது யாழ்.இந்துக்கல்லூரியில் அவருடைய மாணவ காலத்தைக் குறிப்பிட வேண்டியிருந்தது. இன்று மக்கள் அஞ்சலிக் குரித்தான ஹரிச்சந்திரா அதேகல்லூரியின் மாணவரென்பது சிந்தனையைத் தூண்டுகிறது. அக்கல்லூரியின் இரு ஆசிரியப் பெருந்தகைகளின் பேரன்மார் இவ்விருவருமென் றறிந்த அளவில் யாழ் இந்துக்கல்லூரிக்கு விஜயம் செய்து விசேட உரை நிகழ்த்திய சுவாமி விவேகானந்தரின் நினைவு வருவது இயல்பு.

1897ம் ஆண்டு ஜனவரி 24-ம் திகதி இக்கல்லூரியின் வரலாற்றில் மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தின் வரலாற்றிலும் பொன்னுற் பொறிக்கப்படவேண்டிய நாள். சுவாமி விவேகானந்தர் சத்தியத்தின் தாற்பரியத்தை மக்கள் சமுத்திரத்திற்கு எடுத்துரைத்த திவ்விய நாள் அது. பேச்சை நேரில் கேட்டவர்கள் தங்களுக்கு நேரில்விளக்கிய இப்போதனையை இவ் இரு பேராசான்கள்-தம்புமாஸ்டர்-இராசையா மாஸ்டர். பல்லாயிரம் மாணவர்களுக்கு இத்தனித்துவ அனுபவத்தை பகிர்ந்தளித்தனர். அவர்களின் மாதவமே பேரன்மார் இருவரில் பலித்திருக்கிறது போலும். 'எழுமின், விழிமின், லட்சியம் நிறைவேறும் வரைக்கும் முயற்சியில் தொடர்மின்' என்று கர்ச்சித்த சுவாமியின் உத்வேகம் இந்த இளைஞரில் பிரதிபலித்திருக்கிறது இது விடுகதையல்ல; தவத்தின் பயன்! அன்று அடிமைப்பட்டிருந்த பாரத தேசத்துக்குத் தேவையானது 'இரும்பு மனமும், உருக்கு நரம்பும்' என்றுர் சுவாமி விவேகானந்தர்.

அவருக்கு அடுத்தாப்போல் வந்த மகாத்மா காந்தி 1927ல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு சத்தியமே தெய்வம் என்பதை ஐந்து நிமிடங்களில் மிகச் சுச்சிதமாக விளக்கி வைத்தார்.யாழ்ப்பாணத்தை அடக்கி தமிழ் மக்களை ஒடுக்கி ஒரு நியாயமான தீர்வு காண்பது உண்மைக்குப் புறம்பானது 'மண்ணை ஆண்டவர் மண்ணிலும் கோடி' என்பதை பாதுகாப்பு அமைச்சர் அறியமாட்டார். வெறும் ஏட்டறிக்கைகள் தலைக்குமேல் செல்லும் தந்திக்கம்பிகள் போல் புயலுக்கு ஈடாகா. விசுவாசம் என்பது ஆழமாய்ச் செல்லும் பண்டம். இது இப்பகுதி மக்களுக்கு புதியதன்று. நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்களின் பிரதி நிதிகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு இன்று விழிப்பு ஏற்பட்டுள்ளது. மறைந்த வீரர்களுக்கு மக்கள் செலுத்தும் அஞ்சலி அதனை நிரூபிக்கிறது.

ஈழநாடு 1987-05-23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Chip off the Old Block

N. Sabaratnam
Principal Emeritus,

It was Stephen Leacock the wellknown English humorist who said, "A man achieves consummation in his grand son". This thought struck me when I heard of the heroic death of Kanagasabapathy Harichandra in frontline fighting a few days ago.

His grandpa the late S. P. Rasiah who taught for 34 years at Jaffna Hindu College was my teacher in the late twenties, my colleague in the forties and in retirement my trusted counsellor when I was at the helm

In 1969 when the late A. P. Ratnayake, former President of the Senate (now defunct), came to deliver the Mahatma Gandhi Centenary Lecture at the Cumaraswamy Hall, he asked for two of his old friends in the All-Ceylon Scout Service - M. Sabaratnasinghe, former Vice Principal and Scout Chief and S. P. Rasiah, who reorganized scouting in 1923 under his direction. Ratnayake was disappointed to hear that neither of them was alive. It will be my eternal regret that I was not quick-witted enough to show him Rasiah's grandson who was in the middle school then.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Harichandra, according to his school records, was very much like his grandfather who was handpicked by Nevins Selvadurai to be one of his good team that built the school. Certainly, his children and children's children are beholden to an ancestor of that nobility of nature.

Both heredity and environment have combined in just proportion in the making of this young martyr, and true to his name he paid the price for Truth with his life just when he was thirty years old.

It was on 24-01-1897 that Swami Vivekananda visited Jaffna Hindu, the only school in the country to be so blessed, on his return from America after attending the Parliament of Religions. Thousands who assembled to hear him passed on his War-Cry to generations of students at the College. " O thou Mother of Strength, take away my weakness, take away my unmanlines and make me a man ", the Swami is said to have thundered.

It was a call for courage; is it any wonder that a national institution of the Tamils in this country has turned out men of the mettle of Harichandra even after nine decades?

Courage, as G. K. Chesterton said, is almost a contradiction in terms It means a strong desire to live taking the form of a readiness to die; Harichandra was always ready.

This is comfort enough for his family, the community and the country for what would otherwise appear as an irreparable calamity.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகத்தின் திருமகன்

எங்கள் மண்ணில் மட்டுமே
நடக்கும் கொடுமையிது
அழகிய பூக்களெல்லாம்
ஏனோ
காய்க்காமல் கனியாமல்
தினம் தினம்
உதிர்ந்து விடுகின்றன.

நேற்றுவரை
மணம் பரப்பி நின்ற
'' ராதா '' என்ற
ராஜபுஷ்பமொன்று
இன்று
ஈழத்தாயின் அர்ச்சனைப் பூக்களில்
ஒன்றானது.

ஓ ! ஈழத்தாயிடம்
சுதந்திர வரம் பெற
இன்னும் எத்தனை
பூக்களை
இழக்கப் போகிறாயோ?

மற்றவர்களெல்லாம் இறப்புக்காக
கவலைப்படுவர். ஆனால்
'' ராதா '' — நீ
இறப்பின்போதும் விடுதலையின்
பிறப்புக்காகவே கவலைப்பட்டிருப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் போன்றவர்களை
இழந்து தான்
விடுதலை பெறவேண்டும்.
என்று தெரிந்தபோது..............................
ஓ! விடுதலையின் பெறுமதி
எத்தனை உயர்ந்த தென்பது
இப்போது தான் விளங்குகிறது.

நீ கண்மூடிக் கிடக்கின்ற
காட்சியினைப் பார்த்திருந்தால்
உனையீன்ற
வீரத்தாய் மகிழ்ந்திருப்பாள்.
ஆம்! நாட்டின் விடுதலைக்காய்
நலிவுபடத் திரிந்தமகன்
இன்றுவது ஓய்வெடுக்கின்றான் என்று
உன்தாய் நிச்சயம் மகிழ்ந்திருப்பாள்.

நண்பா எங்களுக்கு
ஒன்றுமட்டும் புரியவேயில்லை
எங்கள் வயதுதானே உனக்கும்
பின் எப்படி
எங்கள் இரத்தத்தில்
பாசமும் பற்றும்
காதலும் காமமும்
கலந்திருக்க
உன் இரத்தத்தில் மட்டும்
இவை ஒன்றுமே இல்லாமல்
விடுதலை என்கின்ற வேகம் கலந்தது?
ஓ......நாங்கள் ஆசையின் புதல்வர்கள்
நீயோ தியாகத்தின் திருமகன்.

கண்ணனன் மேல் காதல் கொண்டு
அவனை
கைப்பிடிக்காமலே போனுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த "ராதா"
எங்கள்
மண்ணின் மேல் காதல் கொண்டு
மாண்புமிகு விடுதலையை
கைப்பிடிக்காமல் போய்விட்டான்
இந்த "ராதா"

தோழா!
உன் ஆத்ம சாந்திக்காய்
நாம் பிரார்த்திக்க மாட்டோம்
சுதந்திரப் போராட்டம் என்கின்ற
வேள்வியில்
ஆகுதியாய் விழ்ந்த நீ
விடுதலை என்கின்ற
வேள்விப்பயன் கிட்டிய பின்தான்
சாந்தியடைவாய் என்பது
தெரிந்து போனதால்
"ராதா" உன் ஆத்ம சாந்திக்காய்
நாம் பிரார்த்திக்கமாட்டோம்
முயற்சிப்போம்
இது உறுதி.

தமிழீழ கிராம நீதிமன்று
யாழ்ப்பாணம்

---

தமிழுக்கும் அமுதென்றுபேர்! — அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்குநேர்.
— பாரதிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை அழவிடு தாயே!

- மறவன்

எம்மை அழவிடு! எம்மை அழவிடு!
தமிழ் அன்னை எம்மை அழவே படைத்தாள்
தன்னந் தனியே சாய்ந்து படுத்து
தலையணை நடுவே இருமுகம் புதைத்து
தாயொரு தந்தை எம் தலைமுறை
சரம் சரமாக பிரிவதை நினைத்து

எம்மை அழவிடு! எம்மை அழவிடு!
தமிழ் அன்னை எம்மை அழவே படைத்தாள்

கண்ணீர் வடித்துக் கரைந்திளைத்து
மாண்டு படுத்தால் மயானம் வரைக்கும்
தூக்கி வருவோர் தோள் வலிக்காது
சுடப்படும் போதும் நெய்கேட்காதே

எம்மை அழவிடு! எம்மை அழவிடு!
தமிழ் அன்னை எம்மை அழவேபடைத்தாள்

வானம் அழுவது மழையெனும் போது
வையம் அழுவது பனியெனும் போது
கானம் அழுவது கலையெனும் போது
நாம் அழுவதோ நம் எதிர்கால
வாழ்வை ஏங்கியே?

எம்மை அழவிடு! எம்மை அழவிடு
தமிழ் அன்னை எம்மை அழவே படைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைவீரன் பெருமிதம்

யோகநாதன் அகரமுதல்வன்

Death is like a slumber deep
And Birth like Waking from thah Sleep
(உடல் அழிந்தாலும் உயிர் அழிவதில்லை; அதனால்)

மரணம் என்பது உயிருக்குத் தூங்குவதைப் போன்றது. அந்த உயிர் வேறோர் உடலில் பிறப்பது தூங்கி விழிப்பது போன்றது.

தெய்வீகத் திருக்குறள்-34-9

புரந்தார் கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து.

தம்மைக் காத்த தலைவர் அழுது கண்ணீர் விடும்படி ஒரு வீரனுடைய உயிர்விடப் பெற்றால், அப்படிப்பட்ட மரணம் கெஞ்சிக்கேட்டாயினும் பெற்றுக்கொள்ளத்தக்க பெருமை உடையது.

Of What use is it to die amedst Weeping relatives and of age sickners? One should eagerly seek a death that is followed by tears of greateful admiration from the eyes of the chif whom one served.

Divine Thirukkural 78-1

மாமறைப் பொருள் வாழ்கவே
மக்கள் நலம் சூழவே.
Glory to Valluvar – Prosper A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்திறந்து காத்திருக்கின்றனர்

புதுவை இரத்தினதுரை

பூ விரிந்தது போலச் சிரித்ததும்
போர் முகத்திலே போய்த் திரிந்ததும்,
சாவிழுங்கிய சரித்திரம் ஆகுமோ?
சந்தம் வழிந்த கவிதை கிழியுமோ?
எங்கள் வானிலே எழுந்த கதிரவன்
இன்று "கோம்பயன்" சுடலையில் எரியுமோ?
தங்கமேனியைத் தீக்கதிர் சூழுமோ?
தணலில் வேகுமோ சாம்பலும் பூக்குமோ?

நீவரிந்து கட்டிய கச்சைகள்
தீயை குலைந்துமே நிலத்திடை வீழுமோ?
நீ திரிந்த பூமி அழியுமோ?
நீ எரிந்த மேடு சூடாறுமோ?
புல் முளைக்குமோ? பேச்சுடன் போகுமோ?
போர்க் களத்திலே...புலிப்படை தோற்குமோ?
இல்லையென்று பல்லாயிரம் வேங்கைகள்
எழுந்து நிற்பது உனக்குத் தெரியுமோ?


காடு மேடுகள் என்று திரிந்தவன்
கண்ணிவெடியிலோர் சாதனை செய்தவன்
பாடுகின்ற சுதந்திரப் பறவையைப்
பார்த்து வானிலே — சிறகை விரித்தவன்
நாடு வேண்டியோர் யாகம் புரிந்தவன்
ரத்த வேள்வியில் ஆகுதி யானவன்
வீடு வாசலை விட்டுமே வந்தவன்
வேங்கையாகி யெம் வேதனை தீர்த்தவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று தீயிலே வெந்து முடிவனோ?
இல்லை;
ஆயிரம் பேரெனப் பூமியில்
வந்து வந்து
மறு பிறப் பெய்துவான்
வலிமை சேர்த்திடப் பலமெக் கூட்டுவான்
வென்று நாமொரு காவியம் பாடிடும்
வேளை வந்திடும் போதினில்
மீண்டுமோர்
கன்றெனத் தமிழ் ஈழத்து மண்ணிலே...
கண்திறந்திடு
காத்திருக் கின்றனம்.

ஈழமுரசு 23-05-87

கொலை வாளினை எட்டா மிகு
கொடியோர் செயல் அறவே
குகைவாழ் ஒரு புலியே உயர்
குணமேவிய தமிழா — பாரதிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணில் கலந்து விட்டான்

- சலீம்

கங்கை நதியே – உனக்கோர்
கருணை வாய்த்ததடி
பொங்கும் கடல் அலையே – உனக்கோர்
புகழும் வாய்த்ததடி!

பச்சை வயலழகே – உனக்கவன்
பாசம் கிடைத்ததடி!
இச்சைக் கினிய மகன் – உடலை
எடுத்துத் தூவி விட்டார்!

மண்ணிற் கலந்துவிட்டான் – அவனோர்
மந்திர மாகி விட்டான்
விண்ணிற் பறந்து விட்டான் – ராதா!
வேதம் சமைத்து விட்டான்

நாட்டுக் கென்றே பிறந்தான் – விடுதலை
நாட்டுக் கென்றே பிறந்தான்
நாட்டுக் கடல் களுக்கு – விடுதலை
நாட்டக் கரைந்து விட்டான்

மன்னவன் சாம்பலிலே – ஓர் துளி
என்னுடன் சேராதோ – அவன்
தன்மை படியாதோ
எனக்கோர் தைரியம் தோன்றுதோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழம் உதித்திடும் காணுவாய்

இ. ஜெயராஜ்

துள்ளித் தமிழ்வர நாவிலே — உந்தன்
தூய தனிப்புகழ் பாடிடும் — அந்த
நல்ல வரம் எனக்கில்லையே — இன்று
நண்ப உனைப் பிரிந்தேங்கிடும் — எந்தன்
உள்ளம் உயர் கவிபாடுமா? — இல்லை
உன்னைத் தினம் நினைத்தேங்குமா?

பள்ளியில் நானும் படிக்கையில் — அங்கு
பற்பல சாதனை செய்து நீ — எங்கள்
உள்ளம் நிறைந்துமே மாணவர் — தன்னின்
ஓங்கு தலைவனும் ஆகினாய் — அன்று
எள்ளளவும் குறை வின்றியே — நீயும்
ஏற்றமுடன் தலை மைத்துவம் — தன்னை
நல்ல முறையில் நடத்தினாய் — நண்ப
யாழ் இந்து உன்னை மறக்குமா?

வங்கியில் வேலையும் பெற்ற நீ — அங்கு
வாழும் வசதிகள் ஆயிரம் — கொண்டும்
மண்ணை மறந்திட வில்லையே — தமிழ்
மக்கள் படும்துயர் தொல்லையே — வந்து
உன்னைத் தினம் தினம் வாட்டிட — அந்த
ஓங்குபுகழ் வங்கி விட்டு நீ — இந்த
மண்ணின் மைந்தனும் ஆகினாய் — இன்று
மாண்டு நீ விண்ணுக்கு ஏகினாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரப்புலி என ஆனபின் — கொண்ட
வெற்றிகள்தான் இங்கு கொஞ்சமோ — உந்தன்
பேரை உரைத்திடச் சிங்களப் — படை
பேதலித்தே தினம் ஓடுமே — நண்ப
ஆரை வினவினும் சொல்லுவர் — உந்தன்
ஆண்மையும், வீரமும், ஆற்றலும் — என்றும்
ஊரை நிமிர்த்த உழைத்தவா — இன்று
உயிரை இம்மண்ணில் விதைத்தவா.

எம்மையே விட்டுநீ போயினும் — தமிழ்
இதயங்கள் எங்கும்நீ வாழுவாய் — ஐய
தம்மையே மண்ணுக்கு ஈந்தவர் — புகழ்
தரணியில் என்றும் மறையுமோ — தினம்
உன்னையே பின்தொடர்ந் தாயிரம் — பேர்கள்
உயிரை இம்மண்ணுக்காய் ஈகுவர் — உந்தன்
எண்ணப்படி இந்த மண்ணிலே — தமிழ்
ஈழம் உதித்திடும் காணுவாய்.

---

உலகாள உனதுதாய் மிக
உயிர்வாதை யடைகிறாள்;
உதவாதினி ஒரு தாமதம்
உடனே விழி தமிழா — பாரதிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம் தேருக்கு பண்புசால் சாரதி

- வாகீசன் -

இந்தமிழ்ச் சாறு; தெளிந்த நல்லாறு
செய்முறை நேர்த்தி தெரிந்த நல்தளபதி
ஆன்றவிந் தமைந்த அன்புடை வள்ளல்
அன்னை நாடு காண தன்னை இங்களித்தோன்
கல்லாமை தனைக் கருவறுக்கின்றவன்
இல்லாமைதனை இல்லா தாக்குவோன்
நல்லோர் இதயம் நாடும் நாயகன்
நாவசைக் காமலே வீரம் படைப்பவன்
மானத் தமிழன் மன்றிடைத் தோன்றிய
ராதா; நறு மணத்தென்றல்
தம்பி தன் வாரிசாய் நினைத்து நின்றவன்
ஈழம் தேருக்கு பண்பு சால் சாரதி
ஓடிந்து விழுந்த பிணப் பேய்களை அடக்க
தாக்கு வதனைத்தும். தாங்கிய தளபதி
ஏழ்மையிற் பிறந்து ஏழ்மை உணர்ந்து
தமிழன் உயர இதயம் விரித்தவன்
குழம்பும் குட்டையிலே குதிக்க நினைத்தவர்
குழம்பிச் சோர்வுற குழப்பம் தீர்த்தவன்
கற்றவன்; பல்கலைக் கல்வி முடித்தவன்
நால்வகை வேதம் அமைத்தவன்
கொள்கை நிலத்திலே வீழ்ந்து வெடித்தவன்
எம்தேசம் பட்டினி ஒழிந்து
பாரில் உயரப் பறக்கும் நாள் வரைக்கும்
வாழிய வென்று வாழ்த்துமிப் பாட்டு!
ஏழைக் கவிஞனின் இதயத் துடிப்பு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நண்பனே

—உனது நண்பன்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

—வள்ளுவம்

வீரர்கள் 'பிறப்பதில்லை', தோன்றுகிறார்கள். இதனாலேயே வள்ளுவரும் உன் போன்றவர்களையே "தோன்றி" என்று தனிப்படப் பேசினார்.

கல்லூரி வாழ்வில் நல்லதொரு நண்பனாக, அவசியம் ஏற்படுகின்றபோது 'மிகுதிக் கண் மேற்சென்று இடித்து'ம் காட்டி ஓர் தலைவனாக நயம்படத் திகழ்ந்த ஹரிச்சந்திரா! நீ விழ வில்லை, விதைக்கப்பட்டிருக்கிறாய். உன்னைப் போல் ஆயிரம் சந்திரர்கள் இன்றும் இங்கே தோன்ற வேண்டும். இந்த தமிழ்ச் சமுதாயத்தின் தற்போதைய காலத்தின் தேவையது.

சிரேஷ்ட மாணவ முதல்வனாகக் கடமையாற்றிய காலத்தில் உன் தலைமையில் பணிபுரியும் பாக்கியம் பெற்ற நாம் தலைமைத்துவத்தின் உண்மைத் தன்மையைத் தெரிந்து கொண்டோம். நல்லதோர் சாரணனாகக் கல்லூரிக்கு நீ பெருமை சேர்த்தபோது 'உற்றுழி உதவும் பண்பை' உணர்ந்துகொண்டோம். உன்னைப் பெற்றதனால், 'சான்றோனெனக் கேட்ட'தனால் உன் தாயைப் போலவே, எம் கல்லூரியும் பெருமை கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உன் வாழ்வை ஓர் உயர்ந்த இலட்சியத்துக்காக அர்ப்பணித்து 'அல்லும் பகலும் அனவரதமும்' அதற்காக உழைத்து, தமிழீழ விடுதலைக்காக காலம் காலமாக எரிந்துகொண்டிருக்கும் 'வேள்வித் தீ'யில் உன்னை நீ 'ஆகுதி'யாக வார்த்துக்கொண்டாயே, உரிமையின் உண்மைக்காக உன் இன்னுயிரையே தியாகம் செய்துகொண்டாயே, நீயும் விசுவாமித்திரன் சந்தித்த மனுக்குலத்துதித்த ஹரிச்சந்திரனேயல்லவோ?

குறுகிய உன் வாழ்க்கைக் காலத்தில் 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்ட' ஒருவனாக நீ ஆகிவிட்டாலும் உனது நண்பர் குழாத்துக்கு 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைகின்ற' உனது நட்பு இனிமேல் கிடையாமை அவர் தமக்குப் பேரிழப்பேயாம்.

இந்தச் சமுதாயத்தில் நீ விட்டுச் செல்கின்ற பாரிய இடைவெளி யாரால், எப்போது, எப்படி, எங்கே ஈடு செய்யப்படப்போகிறது, நண்பனே?

வீர சுவர்க்கத்தை அடைந்துவிட்ட உன் ஆத்மா, எதிர்கால எம் இளைஞர் சமுதாயத்தால் சாந்தி அடைவதாக!

---

தமிழ் எங்கள் உயிரென்ப தாலேவெல்லுந்
தரமுண்டு தமிழருக்குப்புவி மேலே.

— பாரதிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார் இவன்?

— அயலவர்

பிறப்பில் நன்மானைத் தமிழன் கனகசபாபதி குடும்பம்
வளர்ப்பு எழில்மிகு வண்ணார்பண்ணை
தவண்டது ஓடை ஒழுங்கை
நடை பயின்றது, ஐயனார் கோவிலடி
மழலைக்கல்வி யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
கல்வி பயின்றது யாழ். இந்துக்கல்லூரி
சேவையில் சாரணீயத்தில் ஜனாதிபதி விருது
கடமையில் சிரேஸ்ட மாணவ முதல்வன்
கொடைக்கும் நட்புக்கும் கர்ணன்
சத்தியத்துக்கு ஹரிச்சந்திரன்
அகிம்சைக்கு காந்தி
இரக்கத்துக்கு சிபிச் சக்கரவர்த்தி
வலிமைக்கு வாலி தொண்டுக்கு அனுமான்
பார்வைக்கு மன்னன் பழக்கத்துக்கு குழந்தை
தம்பிக்கு தம்பி கிட்டத்தட்ட கிட்டு
அம்மானுக்கு அனுமான் படைக்குத் தளபதி
விளக்குகளில் , அதிசய விளக்கு
கொடியோருக்கு அதிசயப் பிறவி
ஈழ மக்களுக்கு தெய்வப் பிறவி

குடும்பத்தில் ஹரிச்சந்திரா
நண்பர்களிடம் ஹரி
வேங்கைகளில் ராதா
மக்களிடம் விரத்தியாகி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக்கு மரணம் இல்லை

—யாழ். இந்து சாரணர்கள்

சீரிய நெற்றி எங்கே
சிவந்தநல் இதழ்கள் எங்கே
கூரிய விழிகள் எங்கே
குறுநகை போன தெங்கே
நேரிய பார்வை எங்கே
நிமிர்ந்த நன் நடைதானெங்கே?
நிலமெலாம் வணங்கும் தோற்றம்
நெருப்பினில் வீழ்ந்த திங்கே!

அம்மம்மா என்ன சொல்வேன்
அண்ணலைத் தீயிலிட்டார்
அன்னையைத் தீயிலிட்டார்
பிள்ளையைத் தீயிலிட்டார்
தீயவை நினையா நெஞ்சைத்
தீயிலே எரியவிட்டார்
தீயசொல் சொல்லா வாயை
தீயிலே கருகவிட்டார்.

—கவி கண்ணதாசன்

சாரணன் ஹரி எங்கே
சீரிய அவன்தன் சேவை எங்கே
பெரிய விருதுகள்தான் எங்கே
பாரில் நீ புகழ் பெறத்தான் — உன்னை
வாரிச் சுருட்டினரோ
வன் நெஞ்ச மானிடர்கள்
தாரணியில் நின்புகழ் சரித்திரம் போற்ற
பாரினில் நின்புகழ் சரித்திரம் போற்ற
பேரினில் நின்புகழ் என்றும் திகழ்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசய ஒளி

—ஆசிரியன்

யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணை கிராமத்தில் மதிப்பும் கல்வி அறிவும் உடைய கனகசபாபதி அவர்களின் குடும்பத்தில் 22-12-1956ம் ஆண்டில் தோன்றிய இக் குழந்தைக்கு சத்தியத்தை நிலைநாட்ட தன் அரச சுகபோகங்களைத் துறந்து குடும்பத்தையே விற்று துன்பங்களைச் சுமந்து ஈற்றில் சத்தியத்தை நிலைநாட்டிய ஹரிச்சந்திரனின் பெயர் சூட்டிய பெற்றோர்களின் எண்ணங்கள் வீண் போகவில்லை என்பதனை 20-5-87ல் மறையும் வரை இவன் வாழ்க்கை எடுத்துக்காட்டுகின்றது.

தனது கல்வியை யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையி லும் பின் சிறிது காலம் புத்தளத்திலும் ஆரம்பித்து பின் ஈழவள நாட்டில் சிறப்புற்று விளங்கும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் தனது முற்று முழுதான கல்வியையும் சேவைத் திறனையும் பெற்றுக் கொண்டான். ஹரி பாடசாலையில் பல பொறுப்புள்ள பதவிகளை வகித்தான். மாணாக்க முதல்வனாகவும் சிரேஷ்ட மாணாக்க முதல்வனாகவும், சாரணீயத்தில் பல காலம் சேவையாற்றி ஜனாதிபதி சாரண விருதையும் பெற்றான். பள்ளிப் பருவத்தில் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை மிகவும் பணிவான முறையில் சிறப்பாக நிறைவேற்றி வந்தான். இவனது அன்பான சுபாவம் பாடசாலையில் உள்ள அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் மத்தியில் சிறப்பான ஓர் இடத்தை வகித்தது என்பதனை அனைவரும் அன்பாக ஹரி என்று அழைப்பதில் இருந்து உணரக் கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் தனது கிராமத்திலுள்ள நூல் நிலையமான ஐயனூர் கோவிலடி சனசமூக நிலையத்துக்கும் ஆலயத்துக்கும் பணிவான பல கடமைகளைச் செய்து வந்தான். இவனிடம் உள்ள குறைந்த பேச்சும் கூடிய செயல்திறனும் கிராமத்து இளைஞர்களிடமும் பெரியோர்களிடமும் மதிப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. ஹரியின் பேரனூர் மிகவும் புகழ் பெற்ற யாழ்ப்பாண இந்துக் கல்லூரி ஆசிரியரும், சேவை மானுமாகி ச பொ. இராசையா இடத்தை பெற்று விட்டார் என்பதாக பெரியோர்கள் பேசிக் கொள்வார்கள். இவனின் பெற்றோர்கள் இவனை உயர் கல்விக்காக வெளிநாடு அனுப்ப முயற்சித்தார்கள் ஆயினும் இவனின் எண்ணங்களை புரிந்து கொண்ட பெற்றோர்கள் முயற்சியை கைவிட்டனர்.

குகனும் ஹரியும் 1956ம் ஆண்டு பிறந்த இணைபிரியா நண்பர்கள் இவர்கள் இருவரினதும் எண்ணங்களைப் புரிந்து கொண்ட பெற்றோர்கள் இவர்களை ஆசீர்வதிப்பது போல் அவர்கள் போக்கிலேயே விட்டு விட்டார்கள். அந்தக் காலகட்டத்தில் ஹரிக்கு பல்கலைக் கழக அனுமதியும் வங்கித் தொழிலும் கிடைத்தது. ஆனால் ஹரி வங்கித் தொழிலையே தேர்ந்தெடுத்தான். காரணம் புரியவில்லை. பின்பு எங்கள் செவிக்கு குகன் (பொன்னம்மானின்) பிரதிநிதியாக கொழும்பில் இயங்குவதாக செய்திகள் கிடைத்தன. காலம் செல்லச் செல்ல சாதனைச் செய்திகள் சங்கிலித் தொடர்கள் போல் தொடர்ந்தன இவன்தான் ராதா என்ற மகிழ்ச்சியுடன் விடை பெறுகின்றேன். இனி உங்கள் ராதாவைப் பற்றி நாங்கள் கூறியா நீங்கள் தெரிய வேண்டும்.

---

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றுதல் கண்டே
— பாரதிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியும் - பண்பும்

— ஒரு சக போராளி

லெப். கேர்ணல் ராதா எம்மை விட்டுப்பிரிந்து இன்றுடன் 45 நாட்கள் முற்றுப்பெறுகின்றன. அவரது பூதஉடல் அழிந்திட்ட போதிலும், அவரின் போராட்டக் களச்சாதனைகளின் வரலாறு தமிழீழ மக்கள் மத்தியிலும் அவர்களின் சுதந்திரப் போராட்ட வரலாற்றிலும் அழிக்க முடியாத ஓர் வீரவரலாருகிவிட்டது

யாழ் இந்துவில் உயர்கல்வி பெற்று, கொழும்பு நகரின் வங்கியொன்றின் ஊழியராகக் கடமையாற்றிய ராதா தமிழ்மக்களுக்கு எதிரான சிங்கள அரசின் அடக்கு முறைகளையும் அராஜக நடவடிக்கைகளையும் கண்டு கொதித்தெழுந்தான். தமிழ் மக்கள் தன்மானத்துடனும், சுதந்திரத்துடன் வாழ தமிழீழம் ஒன்றே வழி எனக்கடந்த கால வரலாறுகள் மூலம் உணர்ந்து கொண்ட ராதா, தளபதி பிரபா தலைமையில் களப்போராட்டம் நடாத்தி வரும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் 1983ம் ஆண்டுக் காலகட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டான்.

ஏற்கனவே கல்லூரிக் காலத்தில் சாரணர் அமைப்பு மற்றும் "Army cadet" என்பவற்றில் சிறந்து விளங்கிய ராதா, வங்கியில் பேனு பிடித்த தனது கைகளில் இயந்திரத்துப்பாக்கிகளைத் தூக்கிக் கொண்டான். இராணுவப் பயிற்சிகளைச் சிறப்பாக முடித்துக் கொண்ட அவன் புதிய போராளிகளுக்குப் பயிற்சி அளிக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டான். மிகவும் கஸ்டமானதும், பயிற்சிக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவதிகளற்றதும் என சகலராலும் கைவிடப்பட்ட பிரதேசத்தைச், சவாலாகக் கருதி தேர்ந்தெடுத்து அங்கு பயிற்சிப்பாசறையை அமைத்து அதன் மூலம் தன் விடாமுயற்சித் தன்மையை வெளிக்காட்டினான். கடுமையாக பயிற்சிகளின் மூலம் ஏராளமான சிறந்த போராளிகளை உருவாக்கிக் கொடுத்த ராதா குறிப்பாக 5 வது பயிற்சி முகாமில் கடுமையாக உழைத்தான். இந்த முகாமின் பயிற்சி முடிவின்போது கடுமையான சுகவீனத்துக்குள்ளான போதிலும், பயிற்சி முகாமைக் குறிப்பிட்ட காலகட்டத்துள் பல கஸ்டங்களுக்கு மத்தியில் அவன் முடித்துவைத்ததை அங்கு பயிற்சி பெற்ற போராளிகள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். பொதுவில் சொல்வதானால் தன்னம்பிக்கை, விடாமுயற்சி, உறுதியான செயற்பாடு அனைத்தையும் ஒருங்கே கொண்டவன்தான் லெப். கேர்ணல் ராதா.

1985 ஏப்பிரலில் மன்னார் மாவட்டத்தில் தனது களப் போராட்டத்தை ஆரம்பித்த ராதா அங்கு சென்ற ஒரு மாதத்திற்குள்ளேயே மன்னார் பிராந்தியத் தளபதி லெப். கேணல் விக்டரின் தலைமையில் நடந்த மன்னார் பொலிஸ் நிலையத் தாக்குதலில் முக்கிய பங்கு வகித்தான். தொடர்ந்தும் பல தாக்குதல் நடவடிக்கைகளில் விக்டருக்கு உறுதுணையாக விளங்கிய ராதா மன்னார் பிராந்தியத்தில் பயிற்சி முகாம்கள் அமைப்பு, பயிற்சி வழங்கல் மற்றும் அவை தொடர்பான செயற்பாடுகளிலும் தீவிரமாக ஈடுபட்டு வந்தான். மன்னார் பிராந்தியத்தில் மட்டும் ஐந்து பயிற்சி முகாம்களுக்குப் பொறுப்பாக இருந்து பெருந்தொகையான போராளிகளை உருவாக்கினான்.

மன்னார் பிராந்தியத்தில் இராணுவத்துக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளில் விக்டருடன் இணைந்து பங்கேற்றுக்கொண்டான். குறிப்பாக மன்னார் கோட்டைக்கு அருகில் வைத்து இரு இராணுவ வாகனங்கள் மீதான தாக்குதல், நாயாற்று வெளியில் இராணுவத் தாக்குதப் பரப்புக் கடந்தானில் இராணுவத்தினருக்கு எதிரான தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதல் இரு ''பவல்'' கவச வாகனங்கள் மீதான தாக்குதல் உட்பட ஏராளமான தாக்குதல்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ராதா மன்னார் பிராந்தியத்தில் இராணுவ ரீதியிலான அமைப்பைக் கட்டி எழுப்புவதில் மிகவும் முக்கிய பங்கு வகித்ததுடன் மன்னார் மக்களின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமானவனாகவும் திகழ்ந்தான்.

இயக்கத்திற்கும் தலைவருக்கும் விசுவாசமும் நம்பிக்கையும் உள்ளவனாக விளங்கிய ராதா மன்னார் பிராந்திய தளபதி விக்டரின் வீரமரணத்திற்குப் பின்னர் மன்னார் பிராந்திய தளபதியாக பதவியேற்றுக்கொண்டான். மன்னார் மண்ணில் தனது களப் போராட்டத்தை தீவிரப்படுத்திய ராதா – விக்டர் வீரமரணமடைந்த மூன்று மாத காலத்திற்குள் மட்டும் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினரைக் கொன்றொழித்த – இராணுவத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கினான்.

மன்னார்ப் பிராந்தியத்தில் மட்டுமல்லாது தமிழீழத்தின் வெவ்வேறு பகுதிகளிலும் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தான். யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட பண்ணைப் பொலிஸ் நிலைய விடுதி மீதான வெற்றிகரமான தாக்குதலில் தளபதி கிட்டுவுக்கு உறுதுணையாக இருந்தான். தொடர்ந்து யாழ்பிராந்தியத் தளபதியாக நியமனம் பெற்ற லெப். கேர்ணல் ராதா யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட இராணுவம் மீதான தாக்குதல் நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கி வழி நடத்தினான். குறிப்பாக வல்வை மயிலியதனை மினி முகாம் மீதான தாக்குதல், காங்கேசன்துறை ஹாபர் வியூ மினி முகாம் மீதான தாக்குதல், மற்றும் பலாலி அவ்ரோ விமானம் மீதான தாக்குதல் என்பன இவன் தலைமை தாங்கிய நடவடிக்கைகளுள் சிலவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பம் கிடைக்கும் போதே செய்யக்கூடிய சகலதையும் செய்து முடித்துவிடவேண்டும் — எதனையும் ஒத்திப் போடவோ, பிற்போடவோ கூடாது என அடிக்கடி கூறும் ராதா ஒரு நிமிடத்தைத்தானும் அனாவசியமாகச் செலவிட்டது கிடையாது. சில வேளைகளில் நள்ளிரவில் ராதா ஆழ்ந்த நித்திரையில் இருக்கும்போதுகூட சில தோழர்கள் அவரை நித்திரையிலிருந்து எழுப்பி இராணுவ தொழில் நுட்பம், மற்றும் இராணுவ விடயங்கள் சம்பந்தமாக வேண்டுமென்றே கேட்பார்கள். அப்போது கூட எதுவித தயக்கமும் இல்லாமல் வெகு ஆர்வமாக அவ்விடயங்கள் பற்றி ஆராயத் தொடங்கி விடுவான். "என்னால் ஒரு வேலையோ, நடவடிக்கையோ தாமதப்படவோ, அல்லது தடைப்படவோ கூடாது" என்று எப்போதும் கூறும் ராதா போராளிகளுடன் கலகலப்பாகவும், அன்பாகவும் நடந்து கொள்வான். இப்படிப்பட்ட ஓர் உன்னத இலட்சியப் போராளியை, ஈடுசெய்ய முடியாத ஒரு தளபதியை தமிழ் சமூகம் இழந்து விட்டது. இந்த இலட்சியப் போராளி லெப். கேர்ணல் ராதாவின் இலட்சியப் பயணத்தை வென்றெடுக்க அவன் வழியில் தமிழீழ மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு இலட்சியப் பயணத்தைத் தொடர்வோமாக.

---

தலையாகிய அறமே புரி
சரித்திர புதுமையாய்
சமமே பொருள் ஜனநாயகம்
எனவேமுரசறைவாய்! — பாரதிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தன்மான உணர்வோடும்
தமிழீழக் கனவோடும்
போராட்டத் தீயில் புகுந்து
புயலாகி நின்று
தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும்
விடுதலை வேள்வியில் ஆகுதி ஆக்கிய
எங்கள் இனிய **ராதா** (ஹரிச்சந்திரா)வின்
வீரமரணம் கேட்டு உருகிய இதயங்களும்
எமக்கு தேறுதல் கூறிய நெஞ்சங்களுக்கும்
நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கிறோம்.

"நேற்றுவரை எங்கள் பக்கத்திலிருந்தான்
இன்று முதல் எங்கள் நெஞ்சத்திலிருப்பான்"

-குடும்பத்தினர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org